# மதிப்பெண் வழிகாட்டி - 2018-19
# MARKING SCHEME - 2018-19

பன்னிரண்டாம் வகுப்பு | மொத்த மதிப்பெண்கள்: 100
(XII - STD) | Maximum marks : 100
தமிழ் | கால அளவு: 3 மணி நேரம்
TAMIL | Time Allowed : 3 Hours.

.......................................................................................

## பகுதி -அ (50 மதிப்பெண்கள்)
## SECTION-A (50 Marks)

1. **அ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக: (5x1=5)**

(i) உணவை உரிய நேரத்தில் உண்பது மிகவும் நல்லது.
(ii) குறைந்த விலையில் நல்ல பொருள்களைப் பார்த்து வாங்கலாம்.
(iii) சிறுதுளி பெரு வெள்ளம்.
(iv) உழவும் நெசவும் நமக்கு இரு கண்கள்.
(v) உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்வோம்.
(vi) மண்ணின் மணம் மாறாமல் வாழ்பவர்கள் மண்ணின் மைந்தர்கள்.
(vii) கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

**ஆ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களை வல்லின மெய்யிட்டுத் திருத்துக. (5x1=5)**

(i) சில உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் மிக்க நயமுண்டாகக் குறள் அமைத்திருக்கிறார்.
(ii) மரச் சிற்பக்கலை கி.பி.15ஆம் நூற்றாண்டில் இருந்தே காணப்படுகிறது.
(iii) கடைக்குச் சென்று புத்தகங்கள் வாங்கி வா!
(iv) அக்காலத்து மக்கள் இல்வாழ்க்கையைப் பெரிதும் விரும்பியிருந்தார்கள்.
(v) எதையும் எழுதிப் பழக வேண்டும் என்று எனக்குச் சொன்னார் ஆசிரியர்.
(vi) தமிழ்நாட்டுக் கலைச்செல்வங்கள் மிகவும் பெருமைக்குரியவை.
(vii) தனித்தனி குன்றுகளைச் செதுக்கிக் கோயிலாக்கும் முறை பல்லவர், பாண்டியர் காலத்தில் இருந்திருக்கிறது.

**இ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக. (5x1=5)**

(i) மாணவர்கள் அறிவுத்தாகத்தால் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்காமல் இருந்ததில்லை.
(ii) அவன் மாலையில் விளையாட வைப்பான்.
(iii) சத்தியசோதனை என்ற புத்தகம் காந்தியடிகளால் எழுதப்பட்டது.
(iv) “நல்ல சிந்தனைகளை மேம்படுத்துவது எனக்கு மட்டுமே உள்ள அடிப்படை உரிமை” என்பது என் எண்ணம்.
(v) தொலைதொடர்புக் கருவிகளால் எல்லாவிதப் பயன்களும் உண்டு.
(vi) இளமையில் கல்வி கற்பதைவிட வேறென்ன நற்பயன் இருக்க முடியும்? என்று தாத்தா அறிவுரை கூறினார்.

(vii) உலக மக்கள் திருவள்ளுவரைப் போற்றினர்.

**2. (அ) பின்வரும் பத்தியைப் படித்து அதன் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளி. (5x2=10)**

**வினாக்கள்:**

(i) கோபத்தை நாம் எவ்வாறு வெல்ல முடியும்?
நாம் எந்த சூழ்நிலையிலும் அமைதியாக இருந்துவிட்டால், கோபத்தை வென்று விடலாம்.

(ii) மற்றவர்களை வெற்றி காண்பது எப்படி?
அமைதியாக, மெதுவாக பேசுவதன் மூலமே நாம் மற்றவர்களை வெற்றி காண முடியும்.

(iii) நல்ல நண்பர்களை இழந்து விடுவோம் என்பதற்கான வள்ளுவர் கூறும் குறள் யாது?
"சினம்என்னும்சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்"

(iv) கோபத்தினால் ஏற்படும் தீமைகள் யாவை?
நம் மகிமையைக் கெடுத்துவிடும்; வளர்ச்சியைத் தடுத்துவிடும்; நம்மைத் தனிமைப்படுத்தும்; நம்மையே அழித்துவிடும்.

(v) இப்பத்தியில் குறிப்பிடப்படும் நற்செயல்கள் யாவை?
மனதில் உறுதி வேண்டும்; கோபத்தை அடக்க வேண்டும்; மனப் பயிற்சி வேண்டும்; வீட்டிலும் வெளியிலும் நற்பெயர் எடுக்க வேண்டும்.

**(ஆ) <u>நேர்காணல்</u>** **5**

1. மாணவர்களின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப வினா விடைகள் அமைந்திருக்கலாம்.
2. தொடக்க வினா, முடிக்கும் வினா விடைகள் ஆகியவை மரபுப்படி அமைந்திருத்தல் வேண்டும்.
3. தலைப்பு சார்ந்தே வினா விடைகள் அமைதல் வேண்டும்.
4. Positive- கொண்டே விடைகள் அமைதல் வேண்டும்.
5. தொடக்கம், முடிவு வினாவிடைகள் அன்றி தலைப்பு சார்ந்த ஐந்து வினாவிடைகளாவது அமைந்திருத்தல் வேண்டும்.
6. எளிமையும் புரிதலும் சிறப்பும் அவசியம்.

(அல்லது)

**பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.**

**வினாக்கள்:**

(i) நாம் பணத்தை எவ்வாறு செலவு செய்தல் கூடாது?
நாம் பணத்தை தண்ணீர் போல செலவு செய்தல் கூடாது.

(ii) ஒருவனுக்குச் சிறந்த சொத்து எது?
ஒருவனுக்குச் சிறந்த சொத்து சிக்கனம்.

(iii) பெரியாரின் சிறப்பு யாது?
சிக்கனமாக வாழ்ந்தவர் பெரியார்.

(iv) நாம் துன்பமின்றி வாழ வழி யாது?
வாழ்வில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் நாம் துன்பமின்றி வாழலாம்.

(v) இப்பாடலுக்குத் தகுந்த தலைப்பு ஒன்று எழுதுக.
சிக்கனமும் சேமிப்பும்.

**3. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக.** **1x10=10**

பொதுக் கட்டுரை:

தலைப்பு
குறிப்புச்சட்டகம் - 1
முன்னுரை - 1
பக்கத் தலைப்புகள் - 7
முடிவுரை - 1.

மேற்கோள்களுடன் நல்ல மொழிநடையில் கட்டுரை சிறப்பாக இருத்தல் வேண்டும்.

**4. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக.** **1x10=10**

கடிதம்: (விண்ணப்பக் கடிதம்)

தலைப்பு, இடம், தேதி } 1/2
அனுப்புநர் முகவரி - 1
பெறுநர் முகவரி - 1
விளித்தல் - 1/2
பொருள் - 1/2

Content கருத்து

(i) பகுதிவாழ் அறிமுகம்
(ii) தலைப்பு சார்ந்த செய்தி
(iii) Requesting } 5 1/2

நன்றி, இப்படிக்கு, கையொப்பம் (முடிப்பு) - 1/2
உறைமேல் முகவரி - 1/2

(அல்லது)

கடிதம்: (நண்பனுக்குக் கடிதம்)

தலைப்பு, இடம், தேதி, அனுப்புநர் பெயர் முகவரி } - 1
விளித்தல் - 1/2

கருத்து:

(i) நலம் கேட்டல் - 1 1/2
(ii) தலைப்பு சார்ந்த செய்தி 4
(iii) Ending / Completing - 1 } 6 1/2

இப்படிக்கு, உன் அன்புள்ள, கையொப்பம் - 1
உறைமேல் முகவரி - 1

## பகுதி -ஆ (50 மதிப்பெண்கள்)
## SECTION-B (50 Marks)

**5. கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி** **(2x10=20)**

உரைநடை வினாக்களுக்குரிய விடைகளின் கருத்துகள் அனைத்தும் தெளிவாகவும், நல்ல மொழிநடையிலும் சிறப்பாக இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

6. **கீழ்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.** 5

**வினாக்கள்**

(i) இப்பாடல் வரிகள் எத்தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது?
இப்பாடல் வரிகள் மொழி வாழ்த்து என்னும் தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது.

(ii) இதில் குறிப்பிடப்படும் தாய்மொழி எது?
இதில் குறிப்பிடப்படும் தாய்மொழி தமிழ்

(iii) நண்ணும் - பொருள் தருக.
நண்ணும் - வாய்த்த, கிட்டிய

(iv) தாய்மொழியின் சிறப்பு யாது?
நம் கண்ணைத் திறந்து உலகத்தை விளக்கிக் காட்டி கருத்தோடு இசைவதே தாய்மொழியின் சிறப்பு ஆகும்.

(v) இப்பாடல் ஆசிரியர் யார்?
இப்பாடல் ஆசிரியர் அ. வரதநஞ்சையப்பிள்ளை

(அல்லது)

**வினாக்கள்**

(i) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்?
இப்பாடல் இடம்பெற்ற நூல் குறுந்தொகை. ஆசிரியர் கபிலர்.

(ii) பொய்த்தவர் யார்?
பொய்த்தவர் தலைவர்.

(iii) யானெவன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
தலைவி தன்னையே குறிப்பிடுகின்றார்.

(iv) இப்பாடல் இடம்பெற்ற திணை - எழுதுக.
இப்பாடல் இடம்பெற்ற திணை குறிஞ்சி.

7. **கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி** (2x5=10)

செய்யுள் வினாக்களுக்குரிய விடைகளின் கருத்துகள் அனைத்தும் தெளிவாகவும், நல்ல மொழிநடையிலும் சிறப்பாக இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

8. **துணைப்பாடக் கட்டுரை எழுதுக** 10

தலைப்பு - குறிப்புச் சட்டகம் - முன்னுரை - பக்கத் தலைப்புகளுடன் மையக் கருத்துகள் சிதையாமல் எதார்த்த மொழி நடை - முடிவுரை.

9. பண்புநலன் 5

குறிப்பிட்ட பாத்திரப்படைப்பின் குணங்களை வெளிப்படுத்தும் விதமாக கருத்துகள் (with some diologues) இடம் பெறல் வேண்டும்.

--ooOoo--